# இயேசு நமது உண்மையான நண்பர் (வீடுசந்திப்பு பற்றி குழந்தைகளுக்கு போதிக்கவும்)

இந்த பாடதிட்டத்தில் ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.



பெரிய குழந்தை அல்லது ஆசிரியர்: இயேசுவும் அவரது நண்பனான லாசரும் பற்றிய கதையை வாசிக்கவும் அல்லது சொல்லவும் (யோவான் 11:1-44). இது மக்களுடைய வீடுகளுக்கு இயேசு எவ்வாறு சென்றார் என்பதைக் கூறுகிறது. அவர் தமது நண்பர்களை நேசித்து அவர்களுக்குப் புதிய ஜீவனை அளித்தார்.

**வரைக:** இந்த படத்தைப் பிள்ளைகள் வரையவும் அல்லது வண்ணம் தீட்டவும்.

கதை கூறிய பிறகு கேள்விகள் கேட்கவும். விடைகள், தேவைப்பட்டால் ஒவ்வொரு கேள்விக்கும் பின் வருகிறது.

1. தனது நோயாளியான நண்பனைப் பார்க்கப் போகாமல் இயேசு ஏன் இரண்டு நாள் தாமதித்தார்
(வசனம் 4)
2. இறந்து போன லாசருவைப் பார்த்து நித்திரையில் இருப்பதாகக் கூறினார்
(ஏனென்றால் லாசரு மரித்தவனாக இருக்கப் போவதில்லை, வசனம் 4)
3. கல்லறையைப் பார்த்ததும் இயேசு என்ன செய்தார்
(வச.35)
4. இறந்தபின் இயேசுவை விசுவாசிப்பவர்களுக்கு என்ன நடக்கிறது
(வச.25)
5. கல்லறையை விட்டு வெளியே வந்த லாசரு என்ன அணிந்திருந்தான்
(44).

இந்தக்கதையின் ஒரு பகுதியை நாடகமாக நடிக்கலாம். ஆராதனை தலைவரோடு பேசி பிள்ளைகள் இந்த சிறிய நாடகத்தை நடிக்க ஏற்பாடு செய்யவும்.

பிள்ளைகள் ஆயத்தம் செய்ய அவர்களோடு நேரம் ஒதுக்கவும்
இந்தக் கதையின் எல்லாப் பகுதியையும் பயன்படுத்த வேண்டாம்.
பெரிய பிள்ளைகள் சிறுவர்களுக்கு உதவவும்.

பெரிய பிள்ளைகளும் பெரியவர்களும் இந்தப் பாத்திரங்களை நடிக்கலாம்.

**கதை கூறுபவர்:** கதை சுருக்கத்தைக் கூறி சிறுவர்கள் என்ன செய்ய வேண்டும், பேச வேண்டும் என்பதற்கு உதவவும்.

- **இயேசு**
- **மரியாள்**
- **மார்த்தாள்.** லாசருவை சுற்ற துணிகளும், கல்லறையைக் குறிக்க ஒரு மேசையையும் ஏற்பாடு செய்க.

சிறுவர்கள் இந்தப் பாத்திரங்களை ஏற்கலாம்

- **சீஷர்கள்**
- **தோமா**
- **செய்தியாளன்**
- **லாசரு**
- **கல்லறையில் நின்ற மக்கள்**

## பகுதி ஒன்று

**கதை கூறுபவர்:** கதையின் முதல் பகுதியைக் கூறவும், யோவான் 11:1-16. பின் கூறவும்: “லாசரு சொல்வதைக் கேளுங்கள்.”

**லாசரு:** நான் மிகவும் சுகவீனமாய் இருக்கிறேன். நான் சாகப் போகிறேன் என்று நினைக்கிறேன்.

**மார்த்தாள்:** (செய்திகொண்டு போகும் ஒரு ஆளைப்பார்த்து) நீ உடனடியாக இயேசுவினிடத்தில் போய் அவரது நண்பனை சுகமாக்க உடனடியாக வரும்படி கூறு.

**செய்திகொண்டு சென்றவன்:** (ஓடி இயேசுவிடம் போய்) இயேசுவே! சீக்கிரமாக வாரும்! உமது நண்பராகிய லாசரு மரிக்கப் போகிறார்!

**இயேசு:** இது மரணத்தில் முடியாது. நான் சில நாட்கள் காத்திருக்க வேண்டும். அதனால் தேவன் மகிமைப்படுவார் (அமர்கிறார்)

**கதை கூறுபவர்:** சில நாட்கள் கழிகின்றன…

**இயேசு:** (எழுந்து கூறுகிறார்) இதுவே செல்வதற்கான சமயம்!

**சீஷர்கள்:** இயேசுவே! நீர் லாசருவின் வீட்டிற்குப் போகக் கூடாது. யூதர்கள் உம்மைக் கொல்ல விரும்புகிறார்கள்!

**இயேசு:** லாசரு உறங்குகிறான்! அவனை நாம் எழுப்புவோம் (லாசருவை நோக்கிப் போகிறார்)

**தோமா:** அப்படியானல் நாமும் போய் இயேசுவுடன் மடிவோம்

## பகுதி இரண்டு

**கதை கூறுபவர்:** கதையின் இரண்டாம் பகுதியைக் கூறுகிறார், யோவான் 11:17-28. பின் சொல்லுகிறான். “மார்த்தாள் கூறுவதைக் கேளுங்கள்.”

**மார்த்தாள்:** அழுகிறாள் லாசருவைத் துணியால் சுற்றுகிறாள். மேசையின் அடியில் தரையில் அவனை கிடத்துகிறாள். பின் இயேசுவைப் பார்த்து, அவரிடம் சென்று கூறுகிறாள். “கர்த்தாவே! லாசரு நான்கு நாட்களுக்கு முன் இறந்து போனான். நீர் இங்கே இருந்திருந்தால் அவன் மரித்துப் போயிருக்க மாட்டான்!”

**இயேசு:** உன் சகோதரன் மறுபடியும் வாழ்வான். நான் உயிர்த்தெழுதலும் ஜீவனும் என்று அறிந்திருக்கிறாய் அல்லவா!?

**மார்த்தாள்:** ஆம்! எனக்கு அது தெரியும்

**கதை கூறுபவர்:** கதையின் மூன்றாவது பகுதியைக் கூறுகிறார், யோவான் 11:29-44: பின் சொல்லுகிறார், “இயேசு கூறுவதைக் கேளுங்கள்.”

**இயேசு:** மரியாள் எங்கே?

**மரியாள்:** (ஓடி வந்து) இயேசுவே, ஏன் எனது சகோதரனை இறந்து போக விட்டீர்?

**இயேசு:** எனக்கு மிகுந்த துக்கமாக இருக்கிறது. கல்லறையைக் காட்டுங்கள்!

**மரியாள்:** (லாசரு கிடப்பதை காட்டுகிறாள்)

**இயேசு:** (லாசருவைப் பார்த்து கண்ணீர் விடுகிறார்)

**கல்லறையில் நிற்கும் மக்கள்:** பாருங்கள்! இயேசு எவ்வளவு தூரம் அவனை நேசித்தார். ஆமாம்! அவர் லாசருவை சந்திக்கப் பல முறை வந்தார்.

**இயேசு:** (சத்தமாக) லாசருவே! வெளியே வா!

**லாசரு:** (துணி சுற்றியபடியே எழுந்து நிற்கிறான்)

**இயேசு:** கல்லறைக்கு உரிய துணிகளை அவிழ்த்து எறியுங்கள்! அவன் போகட்டும்!

**கல்லறையில் நிற்கும் மக்கள்:** (துணிகளை அவிழ்த்து விட்டு) பாருங்கள்! அவன் உயிர் உள்ளவனாக எழுந்து விட்டான்! யார் இந்த இயேசு?

**கதை கூறுபவர்:** நாடகம் முடிந்து விட்டது என்று அறிவித்து, உதவியவர்களுக்கு நன்றி கூறவும்.

அதன் பின்..

**கேள்விகள் கேட்கவும்:** இந்தக் கதையை சிறுவர்கள் பெரியவர்களுக்கு நடித்துக் காட்டினால், மேலே பட்டடியலிடப்பட்டுள்ள கேள்விகளை அவர்கள் பெரியவர்களிடம் கேட்கவும்.

**கலந்துரையாடல்:** வீடுகளை சந்தித்து மக்களுக்கு நாம் சேவை செய்யக் கூடிய பிற விஷயங்களுக்கு உதாரணங்கள் யாவை? (சிறுவர்கள் அல்லது பெரியவர்கள் உதாரணங்களைக் கூறவும்)

**வரைதல்:** ஒரு மேசையும், அதன் மேல் உணவும் வரைக. சிறுவர்கள் அதைப் பார்த்து வரையட்டும்.

- பெரியவர்கள் சிறுவர்களுக்கு உதவட்டும்
- படங்களை ஆராதனையின் போது பெரியவர்களுக்கும், வீட்டில் பெற்றோருக்கும் காட்டுதல்.
- உணவு வைக்கப்பட்டுள்ள மேசை, எவ்வாறு இயேசு நமது வீட்டிற்குள் வந்து நமக்கு புதிய ஜீவனை கொடுக்கிறார் என்பதைக் குறிக்கிறது. நாம் பிறருடைய வீடுகளுக்கு சென்று அவரைப் பற்றி கூறுவோம்.
- கீழ்க்காணும் மனன வசனம் மூலமாக அவர்கள் இயேசுவைப் பற்றி நமது இதயக் கதவண்டையில் விவரிக்கட்டும்:

**மனனம் செய்தல் : வெளி 3:20**

**பாடல்:** சங்கீதம் 145:15, 16, 18 ஐ மூன்று சிறுவர்கள் வாசிக்கட்டும்

**ஜெபம்:** “கர்த்தாவே! உம்மை நம்புகிற மக்களுக்கு நீர் அதிசயமான காரியங்களைச் செய்கிறீர். நீர் எங்களோடு வாழ்ந்து எங்களுக்குப் புதிய ஜீவனைத் தருகிறீர். நாங்கள் இறந்த பிறகு, மரித்தோரிடத்தில் இருந்து எங்களை எழுப்பி நீர் இருக்கும் இடத்தில் எங்களை என்றென்றும் வாழச் செய்வீர். மற்றவர்களை சந்தித்து சேவை செய்வதின் மூலம் எங்கள் நன்றியுணர்வைக் காட்ட எங்களுக்கு உதவி செய்யும்.”

Copyright © 2003 by Paul-Timothy. Download Paul-Timothy studies freely from www.Paul-Timothy.net